தூரம் தள்ளிப் போகிறவர்களுக்கு, மென்சஸ் தள்ளிப் போகிறவர்களுக்கு, பீரியட்ஸ் வரும். Withdrawal bleeding இருக்கும். அதைப் பப்பாளி மூலம் தெரிந்துகொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் சொன்னதுபோல், பப்பாளி சாப்பிடுவதால் அபார்ஷன் ஆவது கிடையாது. மாதமாக இருக்கிறோம், பிரக்னென்ட்டாக இருக்கிறோம் என்று நினைப்பவர்கள் இந்தப் பப்பாளி சாப்பிடுவதால் withdrawal bleeding ஏற்படும். இதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்திச் சொல்கிறார்கள். ஆகவே, அதில் ஈஸ்டிரஜன் புராடெக்ஸ் அதிகமாக இருக்கிறது. மற்ற சத்துக்களும் அதிகமாக உள்ளன. ஈஸ்டிரஜன் சத்தும் அதிகமாக இருப்பதால் We will have withdrawal bleeding. So we will know whether aminora is due to pregnancy or not. என்பதை நாம் இதன்மூலம் தெரிந்துகொள்ளலாம். வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விடையா சொன்னீர்கள்? விடை சொல்வதற்கு அமைச்சர் ஒருவர் இருக்கிறாரே, அவரிடம் தனிக் கேள்வி போட்டு வாங்கி இருக்கலாமே?

வினா எண் 490, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

490—

ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகம் அமைத்தல்

43429*—திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டிடங்கள் கட்ட போதிய நிலம் வாங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போதிய நிலம் கிடைத்துவிட்டால் பெரியார் விற்பனைக் குழு நிதி நிலை அடிப்படையில் எதிர்வரும் ஆண்டுகளில் மஞ்சளுக்கென வளாகம் அமைக்க ஆவன செய்யப்படும்.

1995 ஏப்ரல் 28]

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுநிலவும் மஞ்சளை பூசி பொலிவுடன் திகழ்வதாக கற்பனை செய்து 'மஞ்சள் நிலா' என்று கவிஞர்கள் பாடிய இந்த மஞ்சள் பண்டைய நாள் தொட்டு தமிழக மகளிர் பயன்படுத்திவரும், இந்தியர்களின் கலாச்சாரத்தோடு ஒன்றிய மங்கலப் பொருளாக விளங்கி வருகிறது. நம் நாட்டில் பெண்களுக்கு மஞ்சளை அழகு சாதன பொருளாகப் பயன்படுத்துவதில் அலாதி பிரியம். சுமங்கலியின் இஷ்ட தேவதை என்று வர்ணிக்கப்படும் மஞ்சள் மருத்துவ குணம் கொண்ட ஒரு சிறந்த கிருமி நாசினி என்பதால்தான் உணவு சமைக்கும்போது இதை அளவாகப் பயன்படுத்துகிறோம். இத்தகைய சிறப்புமிக்க மஞ்சளை தமிழ்நாடு முழுவதிலிருந்தும் கர்நாடகா உட்பட வெளி மாநிலங்களிலிருந்தும் விற்பனைக்காக ஈரோடு கொண்டு வருகின்றனர். ஆண்டுதோறும் 6 இலட்சம் குவிண்டால் மஞ்சள் ஈரோடு வருகிறது. இந்தியாவில் உள்ள மஞ்சள் சந்தைகளில் ஒன்றாகவும், தென்னிந்தியாவில் மிகப்பெரிய மஞ்சள் சந்தையாகவும் ஈரோடு விளங்குகிறது. அங்கே 115 தனியார் மஞ்சள் விற்பனை மண்டிகளும், இரண்டு கூட்டுறவு விற்ப்னைச் சங்கங்களும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் இயங்கி வருகிறது. அங்கே போக்குவரத்து வசதி இல்லாத நெருக்கடியான இடத்தில், போதிய இடவசதியோ, இருப்பிட வசதியோ இல்லாத நிலையில், விற்பனை பல்வேறு இடையூறுகளுக்கிடையே நடைபெற்று வருவதால் அனைத்து வசதிகளுடன் அவசர அவசிய உ[illegible]வு கருதி இந்த நிதியாண்டிலே மஞ்சளுக்கு என்று தனி வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-40*

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் பூசி வந்ததற்குப் பின்னாலே அது மஞ்சள் நிலவு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலவை நான் பார்த்ததே கிடையாது. ஆனால் பார்த்திருக்கிறேன் என்று சொன்னால் காவிரிக் கரையிலே நாங்கள் குளிக்கிறபோதுகூட அந்த நீரைப் பொன்னிநதி என்று சொல்வோம். அதைப் பார்க்கிறபோது, 'பொன்னியவள் பூவுடலில் பூசியுள்ள மஞ்சள் எல்லாம் என்னருமை ஈன்றோடு ஈன்றளித்த மஞ்சளய்யா' என்று நாங்கள் திருச்சியிலே சொல்வோம். எனவே மஞ்சளின் மகத்துவம் என்று சொல்லுவதைவிட அது ஒரு சிறந்த கிருமி நாசினி. அதுமட்டுமல்ல, இன்றைக்கு வண்ணங்கள் உருவாக்குவதற்கும் அது பயன்படுத்தப்படுகிறது. பண்டைக்காலம் தொட்டு தமிழகத்திலே

உணவுப் பதார்த்தங்களிலே அது சேர்க்கப்படுகிறது என்று சொன்னால் அது ஒரு கிருமிநாசினி என்பதற்காகத்தான் அவ்வாறு இன்றுவரை சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே ஈரோட்டிலே அந்த மஞ்சள் வியாபாரத்திற்கு என்று ஒரு வளாகம் தேவை என்பதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசு உணர்ந்து இருக்கிறது. எனவேதான் இதுபோன்ற வளாகத்தை உருவாக்குவதற்கு நாங்கள் இடங்களைத் தேர்வு செய்துகொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். .

திருமதி கே. மரியம்உல்ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் விற்பனையில் உப்பர் என்கிற உள் கமிஷன், சாக்கு எடையாக 2 கிலோவரை கழிப்பது, இந்திய ஒப்பந்தச் சட்டத்திற்கு விரோதமாக விவசாயிகளின் ஒப்புதல் இல்லாமலே கலாசிக் கூலியை நிர்ணயம் செய்வது போன்ற பல முறைகேடுகள் மலிந்திருப்பதாகவும், மாட்டுத் தரகுக்கு இணையாக இன்று மஞ்சள் தரகு இருப்பதாலும் கரும்பு கொள்முதல் நிர்ணயம் உள்ளிட்ட பல பிரச்சினைகளைக் கலந்து பேசி தீர்வு காண அரசு முத்தரப்பு கூட்டம் நடத்துவதைப்போல இந்த மஞ்சள் விற்பனையிலும் மலிந்துள்ள முறைகேடுகளைக் களைய ஆண்டுதோறும் மஞ்சள் முத்தரப்புக் கூட்டம் கூட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும், எலக்ட்ரானிக் எடை அளவைக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் டெண்டர் மூலம் விற்பனை செய்யப்படுவதைப் போல தனியார் மண்டிகளிலும் டெண்டர் மூலம் விற்பனை செய்கிற முறையை நடைமுறைப்படுத்துவதற்கும், மஞ்சள் பவுடர் ஏற்றுமதியில் நல்ல கிராக்கி இருப்பதால் மஞ்சள் பவுடர் தொழிற்சாலை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எத்தனை கேள்விகள் கேட்கிறீர்கள்? ஒரே கேள்விதான் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கமிஷன் மண்டிகளிலும் பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறக்கூடிய அந்த இடங்களுக்குச் சென்று விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை விற்பதால்தான் நட்டம் ஏற்படுகிறது. இந்த நட்டத்திலே இருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் உருவாக்கப்பட்டது. அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் மின்னணு தராசு

1995 ஏப்ரல் 28]

வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே விவசாயிகள் வந்தால் அவர்களுக்கு அவர்கள் கேட்ட விலை என்பதைவிட விவசாயி விரும்பிய விலைக்குத்தான் விற்றுத் தரக்கூடிய பணியினை இன்றைக்கு வேளாண்மை விற்பனைக் குழு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது. எனவே விவசாயிகள் பெருமளவு அங்கே ஆர்வத்தோடு வர வேண்டும் என்றுதான் பல்வேறு நலத்திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு அறிவித்திருக்கிறது. புதிதாக உருவாக இருக்கக்கூடிய மஞ்சள் வளாகத்திலே அனைத்து வசதிகளும் உருவாக்கப்படும்; விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. மாணிக்கம்.

திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலே மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படும் என்று வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக அந்தத் தொகுதியினுடைய மக்களின் சார்பில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டிங் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாகவும், தனியார் கூடங்கள் மூலமாகவும் மஞ்சள் விற்பனை செய்து வருகிறார்கள். எனவே வணிக வளாகம் அமைக்கும்போது அரசு விற்பனைக் கூடமும் தனியார் விற்பனைக் கூடங்களும் ஒரே பகுதியில் அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடத்திலே இருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் வளாகம் அமைக்க அரசு இடத்தைத் தேர்வு செய்துகொண்டிருக்கிறது. இடம் கிடைக்கிற அளவைப் பொறுத்து, தனியாரும் அங்கே பங்கு பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் மஞ்சள் விலை மட்டுமல்ல; பதப்படுத்துவதில் நம்முடைய விவசாயிகள் பழைய முறைகளைப் பின்பற்றிக் கொண்டு வருகிறார்கள். எனவே இன்றைக்கு அந்தப் பகுதிகளிலே இருந்து வருகிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், இந்த வளாகம் அமைக்கப் பட வேண்டும் என்ற விருப்பம் எங்களிடத்தில் இருக்கிறது. புரட்சித் தலைவி ஆணையால் அது அமைக்கப்படும் என்று நாங்கள் சொன்னதற்குப் பிறகு அதை வரவேற்கிறார்கள். அதே நேரத்தில் உழவர் பெருமக்களுக்கு நாம் அறிவுரை வழங்கியாக வேண்டும். இந்த மஞ்சளைப் பதப்படுத்துகிற

போது, அவித்து காய வைக்கிறபோது பழைய முறையை விட்டுவிட்டு இன்றைக்கு ஏற்றுமதியாளர்கள் எதை விரும்புகிறார்களோ அந்தப் புதிய தொழில் நுட்பத்தோடு அதைப் பதப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பதப்படுத்துகிற முறையை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்வதற்கு விரைவில் ஈரோட்டிலே மஞ்சள் கருத்தரங்கம், மஞ்சள் பயிலரங்கம் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கவிநிலவு தர்மராஜ்.

முற்பகல் *10 -45*

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் வணிக வளாகத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஈரோடு மாநகருக்கு வருகை தந்து விற்பனை ஆகிக்கொண்டிருக்கின்ற மஞ்சளில் 75% மொடக்குறிச்சியில் பயிர் செய்யப்பட்டு ஈரோடு மார்க்கெட்டுக்கு வருகிறது. ஈரோடு தாலுக்காவுக்கு உட்பட்ட தொகுதியாக மொடக்குறிச்சி இருப்பதால், வணிக வளாகத்தை 75% மஞ்சளை உற்பத்தி செய்து உலக மார்க்கெட்டிலே முதல் தரமான மஞ்சளை உற்பத்தி செய்யக்கூடிய தொகுதி என்று சொல்லக்கூடிய அளவுக்கு பேரும் புகழும் பெற்றிருக்கிற மொடக்குறிச்சி தொகுதியிலே அமைப்பதற்கு அதிகப்படியாக எத்தனை ஏக்கர் நிலம் கேட்டாலும் நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அந்த மஞ்சள் வணிக வளாகம், மஞ்சள் அரவை ஆலை, மஞ்சள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் முதலியவற்றை மொடக்குறிச்சி தொகுதிக்குத் தரவேண்டுமென்று நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே விண்ணப்பம் வைத்திருக்கிற காரணத்தாலும், பெரும்பாலான விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அருகில் அந்த வணிக வளாகம் இருந்தால் வியாபாரம் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தாலும், அந்த மஞ்சள் வணிக வளாகத்தை என்னுடைய தொகுதியிலே அமைத்துக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் மொடக்குறிச்சி தொகுதியிலே மட்டும் அதிகமாக பயிர் செய்யப்படவில்லை. ஈரோடு, சேலம், வடாற்காடு, தர்மபுரி, திண்டுக்கல்—அண்ணா, பொதுவாக இன்னும் சொல்லப்போனால் எங்கள் திருச்சி என்று எல்லா பகுதிகளிலும்

1995 ஏப்ரல் 28]

மஞ்சள் பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால் அத்தனை மஞ்சளும் விற்பனை ஆகக்கூடிய இடம் ஈரோடுதான். வியாபாரிகள் அங்கேதான் இருக்கிறார்கள். போக்குவரத்துக்கு வேண்டிய வசதியும் அங்கே இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் மஞ்சளை கொள்முதல் செய்யக்கூடிய வடநாட்டு தொழில் அதிபர்கள் எல்லாம் அங்கேதான் குடியிருக்கிறார்கள். எனவே இடம் கிடைக்கட்டும், அப்போது எங்கே வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 491, டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.*

491—

INTRODUCTION OF FAST FOODS AT AAVIN MILK BARS

***22812—Dr. Beatrix D'Souza:**

Will the Hon. the Minister for Dairy Development be pleased to state—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இல்லை.

Dr. Beatrix D'Souza: Hon. Speaker, Sir, the concept of fast food originated in America because busy people wanted food to be prepared very quickly and they also wanted cheap food. In India, we have now started this very successfully. Now, a private company is selling fast food, i.e. 'idli' and 'dosai' which are produced by machine, untouched by hand. I understand that 'Aavin' is now producing a very nice sweet called 'Khalakhand'. They also sell ice-cream packed in a ball-shaped container which children can, later on, play with. They have also introduced buttermilk which comes in sachets. Having done so much, 'Aavin' can launch a productive venture by introducing fast food also. In our State, we have very good varieties of cheese, like garlic cheese, which are comparable to the best in the world. The cheese produced in the Nilgiris District is very well appreciated by the foreigners. Therefore, I would like